முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.C.O.P. No. 17/2023

(M.C.O.P.No.19/2023)

தேதி : 28-08-2025

(ம.சா.1) – திருமதி.ராமேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. நான் எதற்காக யார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் விபத்து சம்பந்தமாக, விபத்தை ஏற்படுத்தியவர் மீது. யார் மீது என்றால் குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது, ஓட்டுநர் மீது, பெயர் தெரியாது. எப்போது விபத்து நடந்தது என்றால் 06.11.2022 இரவு 09.00 மணிக்கு. எங்கு வைத்து விபத்து நடந்தது என்றால் பழனி கொழுமம் மெயின்ரோட்டில் கரடிக்குட்டம், மதுரைவீரன் கோவில் அருகில். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எப்படி விபத்து நடந்தது என்றால் நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மண் ரோட்டில் இடதுப்பக்கம் சென்று கொண்டிருக்கும்போது எதிரே வந்த கார் வலதுபுறமாக வந்து எங்கள்மீது மோதி காம்பவுண்ட் சுவரில் மீது நின்றது. யார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றால் எங்கள் ஊரை சார்ந்த கருப்புசாமி மற்றும் பெரியசாமி ஆகியோர் 108ல் எங்களை அனுப்பி வைத்தார்கள்.

2. அவர்கள் எதற்காக வந்தார்கள் என்றால் அவர்களும் விசேசத்திற்கு வந்தார்கள். சுமார் 100 பேர் கூடியிருப்பார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, நான் அதிர்ச்சியில் இருந்தேன். நான் சொல்வதுபோல எதிரே வந்த காரை 3ம்

எதிர்மனுதாரர் ஓட்டி வரவில்லை என்றால் சரியல்ல. அந்த காரை 3ம் எதிர்மனுதாரரின் சதிஷ் குமார் தான் ஓட்டி வந்தார் என்றும், 3ம் எதிர்மனுதாரரும் அவரது மனைவியும் பின்புறமாக உட்கார்ந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. விபத்தின் காரணமாக அதிர்ச்சியில் சதிஷ்குமார் ஓடிவிட்டார் என்றும், கூட்டம் கூடியதில் அந்த பகுதியின் கவுன்சிலர் போட்டோ எடுத்து போட்டதால் அங்கிருந்த 3ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் காரின் கதவை திறக்க முடியவில்லை என்றும், அங்கிருந்தவர்கள் தான் 3ம் எதிர்மனுதாரரையும், அவரின் மனைவியையும் வெளியே வர உதவி செய்தார்கள் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் தான் 108க்கு போன் செய்தார் என்றும், நான் சொல்வதுபோல் மேற்படி கருப்புசாமி, பெரியசாமி அல்ல என்றால் சரியல்ல. விபத்து பகுதி இருட்டான பகுதி என்பதால் என் கணவர் தான் வேகமாக வந்து மோதிவிட்டார் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டிவரவில்லை என்றும், எனவே அவர் இழப்பீடு கொடுக்க பொறுப்பாக மாட்டார் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.